**தமிழ்நாடுவேளாண்மைப் பல்கலைக்கழகம்**

**&**

**இந்தியவானிலைத்துறை**

**வேளாண் காலநிலைஆராய்ச்சிமையம், கோவை**

**திருப்பூர் மாவட்ட வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை**

**(07.04.2023 முதல் 11.04.2023 )**

**அறிக்கைஎண் 028/2023** **தேதி.06.04.2023**

**மாநிலத்தின் கடந்தவார வானிலை**

தமிழகத்தின் பெரும்பாலான பகுதிகளில் பகல்நேர வெப்பநிலை 34°செ முதல் 38°செ ஆகவும், இரவுநேர வெப்பநிலை 23°செ முதல் 29°செ ஆகவும், கொடைக்கானல் மற்றும் உதகமண்டலம் பகுதிகளில் பகல்நேர வெப்பநிலை 18°செ முதல் 22°செ ஆகவும், இரவுநேர வெப்பநிலை 10°செ முதல் 12°செ ஆகவும் பதிவானது. தமிழகத்தில் மழை பெறப்படவில்லை.

**திருப்பூர் மாவட்டத்தின் கடந்தவார வானிலை**

திருப்பூர் மாவட்டத்தின் 03.04.23 முதல் 05.04.23 வரையிலும் பகல்நேர வெப்பநிலை 34°செ முதல் 37°செ ஆகவும், இரவுநேர வெப்பநிலை 23°செ முதல் 24°செ ஆகவும் காலைநேர காற்றின் ஈரப்பதம் 77 சதவிகிதமாகவும், மாலைநேர காற்றின் ஈரப்பதம் 26 சதவிகிதமாகவும் பதிவானது. சராசரியாக காற்றின் வேகம் மணிக்கு 6-12 கி.மீ வேகத்தில், பெரும்பாலும் கிழக்கு திசையிலிருந்து தென் கிழக்கு திசைவரை பதிவானது.

**திருப்பூர் மாவட்ட வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை**

| கடந்தவார வானிலை (3.04.2023 முதல் 05.04.2023) | | | | அடுத்த ஐந்து நாட்களுக்கான வானிலை முன்னறிவிப்பு 11.04.2023- 08.30 வரை | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 03/04 | 04/04 | 05/04 | தேதி | நாள்-1 07/04 | நாள்-2 08/04 | நாள்-3 09/04 | நாள்-4 10/04 | நாள்-5 11/04 |
| 0.1 | 2.8 | 2.4 | மழை (மி.மீ) | 3 | 0 | 0 | 0 | 3 |
| 35 | 37 | 34 | அதிக பட்ச வெப்பநிலை (°செ) | 37 | 37 | 38 | 38 | 38 |
| 23 | 24 | 23 | குறைந்த பட்ச வெப்பநிலை (°செ) | 25 | 25 | 26 | 26 | 26 |
| 5 | 6 | 5 | மேக மூட்டம் (ஆக்டர்) | 6 | 8 | 1 | 2 | 4 |
| 76 | 77 | 71 | அதிகபட்ச காற்றின் ஈரப்பதம் (%) | 70 | 70 | 80 | 80 | 80 |
| 40 | 66 | 26 | குறைந்தபட்சகாற்றின்ஈரப்பதம் (%) | 30 | 30 | 30 | 30 | 30 |
| 12 | 5 | 6 | காற்றின் வேகம் (கி.மீ/மணி) | 4 | 4 | 4 | 4 | 6 |
| 200 | 180 | 180 | காற்றுவீசும் திசை | 290 | 290 | 160 | 270 | 270 |

**எதிர்பார்க்கப்படும் வானிலை திருப்பூர் (07.04.2023 முதல் 11.04.2023)**

வரும் நாட்களில் வானம் மேகமூட்டத்துடன் காணப்படும். 7.4.23 மற்றும் 11.4.23 ஆகிய தேதியில் தூறல் மழை எதிர்பார்க்கப்படுகிறது. அதிகபட்ச வெப்பநிலை 37°செ முதல் 38°செ ஆகவும், குறைந்தபட்ச வெப்பநிலை 25°செ முதல் 26°செ ஆகவும், காலைநேர காற்றின் ஈரப்பதம் 80 சதவிகிதமாகவும்,

மாலைநேர காற்றின் ஈரப்பதம் 30 சதவிகிதமாகவும் பதிவாக வாய்ப்புள்ளது. சராசரியாக காற்றின் வேகம் மணிக்கு 4-6 கி.மீ வேகத்தில், பெரும்பாலும் கிழக்கு திசையிலிருந்து தென்கிழக்கு திசைவரை வீசக்கூடும்.

திருப்பூர் மாவட்டத்தில் உள்ள தொகுதி வாரியாக உள்ள அடுத்த ஐந்து நாட்களுக்கான மழையளவு

| தேதி | அவிநாசி | தாராபுரம் | குடிமங்கலம் | காங்கேயம் | குண்டடம் | மடத்துக்குளம் | மூலனூர் | பல்லடம் | பொங்கலூர் | திருப்பூர் | உடுமலைப்பேட் | ஊத்துக்குளி | வெள்ளக்கோவில் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 07-04-2023 | 1.0 | 5.0 | 8.0 | 2.0 | 3.0 | 13.0 | 3.0 | 1.0 | 1.0 | 1.0 | 13.0 | 1.0 | 2.0 |
| 08-04-2023 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 2.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 2.0 | 0.0 | 0.0 |
| 09-04-2023 | 0.0 | 0.0 | 2.0 | 0.0 | 0.0 | 4.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 4.0 | 0.0 | 0.0 |
| 10-04-2023 | 0.0 | 3.0 | 5.0 | 0.0 | 1.0 | 10.0 | 1.0 | 0.0 | 0.0 | 0.0 | 10.0 | 0.0 | 0.0 |
| 11-04-2023 | 1.0 | 5.0 | 8.0 | 1.0 | 3.0 | 12.0 | 2.0 | 1.0 | 1.0 | 1.0 | 13.0 | 1.0 | 1.0 |

## வேளாண் அறிவுரைகள்

| | | |
|---|---|---|
| பொது அறிவுரை | | அடுத்த 5 நாட்களுக்கு லேசான தூறல் மழையுடன் காற்றின் வேகம் 4 - 8 கி.மீ வரை எதிர்பார்க்கப்படுகிறது. வெப்பநிலை கடந்த வாரத்தினை விட சற்று கூடுதலாக வாய்ப்புள்ளது.<br>மண் ஈரத்தினைப்பொறுத்து மாலையில் நீர் பாசனம் செய்யவேண்டும். பயிர்கழிவு மூடாக்கு இடுவதால் மண் ஈரத்தினைப் பாதுகாக்கலாம். |
| நெல் | பூக்கும் பருவம் | தற்போது நிலவும் வானிலையால் நவரைப்பருவ நெல் பயிரில் சாறு உறிஞ்சும் பூச்சிகளின் தாக்கம் தென்பட்டால் ஒரு எக்டருக்கு 100 கிராம் தயோமீத்தாக்ஸிம் மருத்தினை தெளிக்கவும். |
| கம்பு | நிலம் தயாரித்தல் | வரும் நாட்களில் மழை எதிர்பார்க்கப்படுவதால்இறவை கம்பு விதைக்கவோ (அ) நடவும் செய்து தேவைப்பட்டால் உடன் நீர்பாசனம் செய்யவும். |
| கரும்பு | நடவு | வறண்ட வானிலையே எதிர்பார்க்கப்படுவதால் முன் மற்றும் இடைப்பட்ட கரும்பிற்கு நீர்பாசனம் செய்யவேண்டும். இளம்குருத்துப்புழு தென்பட்டால் ஒரு எக்டருக்கு 1000 மிலி குளோர்பைரிபாஸ் மருந்தினைத் தெளிக்கவேண்டும். |
| பப்பாளி | | நிலவும் வறண்ட வானிலையால் மரவள்ளி கிழங்கு மற்றும் பப்பாளியில் மாவுப்பூச்சி வர வாய்ப்புள்ளது. எனவே விவசாயிகள் இதை கண்காணிக்கவும். தேவைப்பட்டால் 2 சத வேப்பஎண்ணெய் அல்லது 5 சத வேப்பங்கொட்டை சாறு அல்லது ஒரு லிட்டர் தண்ணீருக்கு 2 மில்லி புரோபனோபாஸ் என்ற மருந்தையும் பயன்படுத்தலாம். |
| வாழை | 5 மாதத்திற்கு மேல் | பகல் மற்றும் இரவு நேர வெப்பநிலை உயர்ந்தும் மாலை நேர காற்றின் ஈரப்பதம் குறைந்தும் காணப்படுவதால் மதியம் 2 மணி முதல் 3 மணி வரை உள்ளூர் பகுதிகளில் சுழற்காற்று ஏற்பட வாய்ப்புள்ளது, எனவே 5 மாத வயதுடைய வாழை |

| | | |
|---|---|---|
| | | மரங்களுக்கு முட்டு கொடுக்கவும். |

| | | |
|---|---|---|
| மா | பூ மற்றும் காய்க்கும் பருவம் | நிலவும் வானிலையல் மா பூங்கொத்துகளில் தத்து பூச்சிகளின் தாக்குதல் தென்படுவதால் ஒரு மிலி தயோமீத்தக்ஸிம் மருந்தினை 10 லிட்டர் தண்ணீரில் கலந்து தெளிக்கவும். |
| தென்னை | | தென்னை மரத்தைச் சுற்றி உள்சாய்வு வட்டவடிவ பாத்திகளை அமைப்பது கோடையில் மழை நீரை தக்க முறையில் வேரில் சேமிக்க உதவும். |
| கால்நடைகள் | | தொடர்ந்து வறண்ட வானிலையோடு அதிகபட்ச பகல் நேர வெப்பநிலை நிலவ வாய்ப்புள்ளதால், கோழி மற்றும் மாட்டுப்பண்ணையில் வெப்பஅயற்சியை குறைக்க கூடாரத்தின் ஓரங்களில் நனைந்த சாக்கு தொங்கவிடாலாம் அல்லது கூடாரத்தின் மேற்கூரைகளில் தண்ணீர் தெளிக்கலாம்.<br>அதிக வெப்பம் மற்றும் குறைவான ஈரப்பதம் காரணமாக கால்நடைகளுக்கு அடிக்கடி தேவையான அளவு சுத்தமான தண்ணீரை கொடுக்க வேண்டும்.<br>கோடை காலங்களில் பெறப்படும் மழையுடன் இடியும் மின்னலும் சேர்ந்து வரக்கூடும். எனவே கால் நடைகளை கூடாரங்களில் கட்டவும். மரங்களுக்கு கீழ் (அ) வெட்டவெளியில் கால் நடைகளை கட்டுவதை தவிர்க்கவும். |

## குறுஞ்செய்தி

- அதிக வெப்பம் மற்றும் குறைவான ஈரப்பதம் காரணமாக வெப்பஅயற்சியை தவிர்க்க கால்நடைகளுக்கு அடிக்கடி தேவையான அளவு சுத்தமான தண்ணீரை கொடுக்க வேண்டும்.

**முதன்மைஅலுவலர் (GKMS)**
**வேளாண் காலநிலைஆராய்ச்சிமையம்**
**த.நா.வே.ப.கழகம், கோவை**